**சுருக்கம்**

உத்தமர் காந்தி ஊராட்சி விருது – 2008–2009–ஆம் ஆண்டிற்கான சிறந்த 15 ஊராட்சிகளுக்கு விருது வழங்குதல் – ஆணையிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (பரா.2) துறை

அரசு ஆணை (பத்தாண்டு) எண்.183 நாள்: 15.04.2010

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (பல்வகை) எண்.111, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 05.09.2006.
2. அரசாணை (பல்வகை) எண்.570, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 28.09.2007.
3. அரசாணை (பத்தாண்டு ) எண். 854, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 19.11.2008.
4. அரசு நேர்முகக் கடித எண். 14449/ப.ரா.2/09–1, நாள் 19.10.2009.
5. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கடித எண். 86795/08/பராஅ 1.2, நாள் 27.03.2010.

* * * * *

ஆணை:

மேலே படிக்கப்பட்டவை ஒன்றிலுள்ள அரசாணையில் கிராமத்தின் ஒட்டு மொத்த முன்னேற்றத்திற்காக ஊராட்சியால் மேற்கொள்ளப்படும் அனைத்து நடவடிக்கைகளையும் அங்கீகரிக்கும் வகையில், மாநிலத்தில் 15 சிறந்த கிராமங்களைத் தேர்ந்தெடுத்து அதற்கு ‘சிறந்த ஊராட்சி’ எனப் பரிசு வழங்கப்படும் என்று ஆணையிடப்பட்டது. இத்திட்டத்தில் தெரிவு பெறும் ஊராட்சிக்கு ஒரு நற்சான்றிதழ், ஒரு கேடயம் மற்றும் ரூபாய் ஐந்து லட்சத்திற்கான வெகுமதியும் பரிசாக வழங்கப்படும் என்றும் மேலும், இத்திட்டத்தில் தெரிவு பெறும் ஊராட்சித் தலைவர்களுக்கு ஒரு நற்சான்றிதழ் மற்றும் ஒரு பதக்கம் வழங்கப்படும் என்றும், இப்பரிசு வழங்கும் திட்டத்திற்கு “உத்தமர் காந்தி ஊராட்சி விருது” என்று பெயரிட்டு அழைக்கவும் ஆணையிடப்பட்டது.

2. 2008–2009 ஆம் ஆண்டிற்கான “உத்தமர் காந்தி ஊராட்சி விருது” வழங்க முன்மொழிவுகள் அனுப்புமாறு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் படிக்கப்பட்டவை நான்கில் கண்டுள்ள அரசு நேர்முகக் கடிதத்தில் கேட்டுக் கொள்ளப்பட்டார்.

..2..

3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், மாவட்ட ஆட்சியர்களிடமிருந்து பெறப்பட்ட 226 முன்மொழிவுகளில் 88 முன்மொழிவுகளை பரிசீலனை செய்ய ஒரு குழு அமைத்திருந்தார். மேற்படி குழு, 88 முன்மொழிவுகளையும் பரிசீலனை செய்து அவற்றிலிருந்து தல ஆய்வுக்கென 47 கிராம ஊராட்சிகளை தேர்வு செய்தது. மேற்படி 47 ஊராட்சிகளை தல ஆய்வு செய்ய ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்கக கூடுதல் இயக்குநர் மற்றும் இணை இயக்குநர் ஆகியோரைக் கொண்ட ஏழு குழுக்கள் அமைக்கப்பட்டன. மேற்படி குழுக்கள், 47 ஊராட்சிகளையும் தல ஆய்வு செய்து தங்களது விரிவான அறிக்கையினை அளித்தது. மேற்கண்டவாறு பரிசீலிக்கப்பட்ட 47 கிராம ஊராட்சிகளிலிருந்து தகுதியின் அடிப்படையில் 15 கிராம ஊராட்சிகளுக்கு 2008–2009 ஆம் ஆண்டிற்கான "உத்தமர் காந்தி ஊராட்சி விருது" வழங்க உரிய ஆணைகள் பிறப்பிக்குமாறு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் பரிந்துரைகளை ஏற்று, தகுதியின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டிருக்கும் 47 ஊராட்சிகளில், கீழ்க்கண்ட 15 ஊராட்சிகளை 2008–2009 ஆம் ஆண்டிற்கான "உத்தமர் காந்தி ஊராட்சி விருது" வழங்கத் தெரிவு செய்து அரசு ஆணையிடுகிறது.

| வ. எண் | மாவட்டம் | ஊராட்சி ஒன்றியம் | கிராம ஊராட்சி |
|---|---|---|---|
| 1. | சேலம் | சங்ககிரி | கோட்டவரதம்பட்டி |
| 2. | தூத்துக்குடி | ஸ்ரீவைகுண்டம் | திருப்பணிச்செட்டிக்குளம் |
| 3. | விருதுநகர் | விருதுநகர் | வச்சக்காரப்பட்டி |
| 4. | நாமக்கல் | எருமப்பட்டி | ரெட்டிப்பட்டி |
| 5. | கன்னியாகுமரி | திருவட்டார் | பேச்சிப்பாறை |
| 6. | ஈரோடு | கோபிச்செட்டிபாளையம் | பொம்மநாயக்கன் பாளையம் |
| 7. | கடலூர் | கீரப்பாளையம் | ஒரத்தூர் |
| 8. | கோயம்புத்தூர் | அன்னூர் | குன்னத்தூர் |
| 9. | விழுப்புரம் | செஞ்சி | சோ.குப்பம் |
| 10. | நீலகிரி | குன்னூர் | பேரட்டி |
| 11. | திருவாரூர் | முத்துப்பேட்டை | மேலப்பெருமழை |
| 12. | பெரம்பலூர் | வேப்பூர் | அத்தியூர் |
| 13. | இராமநாதபுரம் | பரமக்குடி | அரியனேந்தல் |
| 14. | திண்டுக்கல் | ஆத்தூர் | கலிக்கம்பட்டி |
| 15. | கிருஷ்ணகிரி | ஒசூர் | பூனப்பள்ளி |

5. இந்த விருதிற்கான செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்:-

"2515 – ஏனைய ஊரக வளர்ச்சித் திட்டங்கள் – 102 சமுதாய வளர்ச்சி – பத்தாவது ஐந்தாண்டு திட்டப்பணிகள் – II மாநிலத் திட்டங்கள் – KJ தூய்மையான

ஊராட்சி முகாம் – 09 உதவி மானியங்கள் – 03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான மானியங்கள்" (DPC 2515–00–102–KJ-0939).

(ஆளுநரின் ஆணைப்படி)

க. அஷோக் வர்தன் ஷெட்டி,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை,
சென்னை–15.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் (சென்னை நீங்கலாக),
அனைத்துத் திட்ட இயக்குநர்கள், மாவட்ட ஊரக
வளர்ச்சி முகமைகள்.
மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் முதுநிலை நேர்முக
உதவியாளர், சென்னை–9.

நகல்:
நிதித்துறை, சென்னை–9.
திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, சென்னை–9.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை (அனைத்துப் பிரிவுகள்)
இருப்புக் கோப்பு/உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.